## காட்சி – 5

(நிழற்காட்சி : வெண்திரையில் படைவீரர்கள் வரிசை வரிசையாக அணிவகுத்துச் செல்லும் நிழல் காட்சி. இராணுவ முரசொலியும் குழலோசையும் பின்னணியில் ஒலிக்கின்றன. "Left - Right! Left - Right" என்ற இராணுவ அணிவகுப்பின் ஆணை ஒலியும் பின்னணியில் கேட்கிறது. காட்சி முடிவு).

## காட்சி – 6

**இடம்** : (சிவகங்கை அரண்மனைக் காட்சி)

**பாத்திரங்கள்** : முத்துவடுகநாதர், வெள்ளை மருது, சின்ன மருது, ஒற்றன், சேவகன் 2.

(அரண்மனையில் முத்துவடுகநாதரும் மருது சகோதரர்களும் ஆலோசனையில் ஈடுபட்டிருக்கிறார்கள்).

**முத்து** : மருதப்பரே! ராமநாதபுரத்தை நவாப் படையினர் கைப்பற்றிவிட்டார்களாம். ராணியையும் சேதுபதியையும் திருச்சி மலைக்கோட்டையில் காவல் வைக்க அனுப்பிவிட்டார்களாம். என்ன அக்கிரமம், பார்த்தீர்களா?

**வெள்ளை** : ஆம், மகராஜா, செய்தியை நானும் கேள்விப்பட்டேன். எங்கிருந்தோ வந்த

Scanned by CamScanner

வெள்ளைப் பரங்கிகளுக்கு இத்தனை ஆணவமா? இன்று ராமநாதபுரம்; நாளை பாஞ்சாலங் குறிச்சியோ - அல்லது....

(சேவகன் - 2 ஓடோடி வருகிறான்).

சேவ. 2 : (பணிந்து) மகாராஜா!

முத்து : என்ன செய்தி?

சேவ. 2 : மகாராஜா! பரமக்குடி காவல் கூடத்திலிருந்து நமது ஒற்றன் ஒருவன் வந்திருக்கிறான். தங்களை உடனே பார்க்க வேண்டுமாம்.

முத்து : என்ன, ஒற்றனா? போ. உடனே அவனை வரச்சொல்!

சேவ. 2 : உத்தரவு மகாராஜா.

(உள்ளே செல்கிறான். தொடர்ந்து ஒற்றன் மேடைக்கு வருகிறான்).

ஒற்றன் : (பணிந்து) மகாராஜா! நான் பரமக்குடிக் காவல் கூடத்திலிருந்து இரவோடு இரவாய் ஓடோடி வருகிறேன். மிகவும் அவசரமான செய்தி; ஆபத்தான செய்தி!

முத்து : ஆபத்தான செய்தியா? சொல் சீக்கிரம்!

ஒற் : மகாராஜா! ராமநாதபுரத்திலிருந்து வெள்ளைக் காரக் கும்பினிப் பட்டாளமும், நவாப்புச் சேனையும் நமது சீமையை நோக்கி முன்னேறி வருகிறார்கள். நம்மீது படையெடுக்கத்தான் என்று நமது ஒற்றர்கள் சிலர் ஓடோடி வந்து தகவல் சொன்னார்கள்.

முத்து : இவ்வளவுதானா? இன்னும் ஏதாவது உண்டா?

Scanned by CamScanner

ஒற் : இவ்வளவுதான் மகாராஜா.

முத்து : சரி. நீ உடனே மீண்டும் உனது காவல்கூடத்துக்குச் செல். உடனுக்குடன் கிடைக்கும் தகவல்களை யெல்லாம் தாமதியாமல் அனுப்பி வை. துணைக்கு நான்கு வீரர்களையும் அழைத்துச் செல். சரி, நீ போகலாம்.

ஒற் : உத்தரவு மகாராஜா.

(ஒற்றன் செல்கிறான்).

முத்து : மருதப்பரே! கேட்டீரா செய்தியை? ராமநாதபுரத்தின் வீழ்ச்சியைப் பற்றிய செய்தி நேற்று எனக்கு எட்டியவுடனேயே நான் எதிர்பார்த்தேன், அடுத்த படையெடுப்பு நம்மீதுதான் என்று. எதிர்பார்த்தது நடந்தே விட்டது. நவாபின் சேனைக்குக் கம்பெனியான் ஒத்துழைப்பு!

வரி வசூல் என்று பெயர் சொல்லிக்கொண்டு, இந்தப் பரங்கிக் கொள்ளையர்கள் நம் நாட்டுக்குள் துப்பாக்கிகளையும் தோட்டாக்களையும் கொண்டு வருகிறார்கள். இவர்களுக்குத் தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும், மருதப்பரே, தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும்!

வெள்ளை : செய்தியைக் கேட்டு என் ரத்தம் கொதிக்கிறது; மகாராஜா! ஆம், நாம் இந்த வெள்ளையர் களுக்குப் பாடம் கற்பிக்கத்தான் வேண்டும். வைரத்தை வைரத்தைக் கொண்டுதான் அறுக்க வேண்டும். வாளுக்கு வாள்; ஆளுக்கு ஆள்; ரத்தத்துக்கு ரத்தம்! நாம் போருக்குச்

சித்தமாக வேண்டியதுதான் மகாராஜா. ஆனால்...

முத்து : (குறுக்கிட்டு) ஆனால், என்ன மருதப்பரே?

வெள்ளை : மகாராஜா! வந்தபின் நோவதைவிட, வருமுன் காப்பதே விவேகமான காரியம். இந்தச் சிவகங்கைக் கோட்டையை நாம் பாதுகாக்க முனைந்தால், எதிரிகளிடம் சிக்கிக்கொள்வதை நம்மால் தவிர்க்கவே முடியாது. ஏற்கெனவே நாம் படைபலம் குன்றியிருக்கிறோம். மேலும், இந்தச் சிவகங்கைக் கோட்டையும் எதிரியின் தாக்குதலைச் சமாளிக்கக் கூடிய அளவுக்குப் பலம் பொருந்திய கோட்டையும் அல்ல.

முத்து : (யோசித்து) உண்மைதான். சரி, அப்படியானால் உமது யோசனை..?

வெள்ளை : மகாராஜா! நாம் இன்றே காளையார் கோயில் அரணுக்குப் போய்விட வேண்டும். நமது படை பலத்தையும் தாக்குதலையும் காளையார் கோயில் காட்டுக்குள்ளேயே ஒருமுகப்படுத்த வேண்டும்.

சின்ன : ஆம். மகாராஜா! கல்லாலான இந்தக் கோட்டையைவிட, காட்டாலான காளையார் கோயில்தான் நமக்குச் சிறந்த பாதுகாப்பு. அந்தக் காட்டுக்குள் மட்டும் எதிரிகள் சிக்கிவிட்டால், பிறகு அவர்கள் கதி சக்கரவியூகத்துக்குள் சிக்கிய அபிமன்யுவின் கதிதான். அங்கிருந்து கொண்டு நாம் எதிரிகளைத் தாக்குவது சுலபம். எனவே காட்டுக்குள்ளே இருந்து எதிரிகளை முறியடித்து விட்டால், பிறகு சிவகங்கைக் கோட்டையையும் நாம் லகுவில் மீட்டுக்கொண்டுவிடலாம்.

Scanned by CamScanner

**முத்து** : உங்கள் யோசனையை வரவேற்கிறேன், மருதப்பரே. அப்படியானால், நாம் இப்போதே காளையார் கோயில் அரணுக்குச் செல்ல ஆயத்தமாக வேண்டும். நமது அரண்மனைச் சாசனங்களையும் ஆபரணங்களையும் ஆயுதங்களையும், நாம் இன்றே இப்போதே அங்கு அப்புறப்படுத்தியாக வேண்டும். ராணி வேலு நாச்சியாரையும் தகுந்த காவலோடு அங்கு அனுப்பி விடவேண்டும். சரி, நீங்கள் இருவரும் படைவீரரைப் புறப்படச் செய்ய முனையுங்கள். நான் ராணியைச் சந்தித்து மற்ற ஏற்பாடுகளைக் கவனிக்கிறேன்.

**வெள்ளை** : அப்படியே மகாராஜா.

(முத்து வடுகநாதர் உள்ளே செல்கிறார்).

**வெள்ளை** : தம்பி, சின்ன மருது. நமது நிலையும் எதிரியின் பலமும் உனக்குத் தெரியாத விஷயமல்ல. இந்தப் போர் நமக்கு ஒரு பலப் பரீட்சைதான். நாம் நமது படைபலத்தை உறுதியாக்க வேண்டுமென்றால், நமது பட்டாளத்தை மட்டும் நம்பிப் பயனில்லை. நாட்டு மக்களின் ஒத்துழைப்பும் நமக்குத் தேவை. எனவே நீ இப்போதே முரசறையச் செய்து, மக்களுக்கு நிலைமையை எடுத்துச் சொல். அவர்களையும் ஒன்றுதிரட்டு. இப்போதே இதனைக் கவனி.

**சின்ன** : சரி, அண்ணா.இப்போதே முரசறையச் சொல்கிறேன். நான் வருகிறேன்.

(சின்ன மருது புறப்பட்டுப் போகிறான்).

– திரை –

Scanned by CamScanner

# காட்சி – 7

**இடம்** : தெருக்காட்சி

**பாத்திரங்கள்** : முரசறைபவன் – 1. சின்ன மருது. ஊர் மக்கள்.

(காட்சி ஆரம்பத்தில் முரசறைபவன் தனது முரசைப் பலமாக அடிக்கிறான். முரசொலி கேட்டு ஜனங்கள் இருபுறமும் வந்து கூடுகின்றனர். கூடிய பின்பு சின்ன மருது ஜனங்களை நோக்கிப் பேசத் தொடங்கினான்).

**சின்ன** : சிவகங்கைச் சிங்கங்களே! மறக்குடிப் பெருமக்களே! வீரப் புதல்வர்களே! நமது நாட்டின்மீது பரங்கியரும், நவாப்பும் படையெடுத்து வந்துகொண்டிருக் கிறார்கள். நமது சீமையையும் செல்வத்தையும், பெண்டுகளையும் பிள்ளைகளையும் தின்று விழுங்க வந்துகொண்டிருக்கிறார்கள். கணத்துக்குக் கணம் அவர்கள் படை நமது நாட்டின் எல்லையை நெருங்கிக்கொண்டே இருக்கிறது. இந்த அநியாயத்தை, நம்மால் சகித்துக்கொண்டிருக்க முடியாது. நமது நாடும் நகரமும், வீடும் வாசலும், மனைவி மக்களும், அன்னியர் கையால் நாசமாவதை நம்மால் அனுமதிக்க முடியாது.

ஆதிக்க வெறிகொண்ட அன்னியரை, நம் நாட்டின் தலைவாசலிலே தடுத்து நிறுத்த வேண்டும். எனவே நீங்கள் பிறந்த

மண்ணைக் காக்க, உங்கள் மன்னனைக் காக்க; உங்கள் பெண்டு பிள்ளைகளைக் காக்க, சொத்துச் சுகங்களைக் காக்க, இப்போதே படைதிரண்டு வாருங்கள். உங்களிடமுள்ள ஆயுதங்களையும், கல், கவண், கதை வேல், வாள், வளரி, வெட்டரிவாள் முதலிய சகல ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டுவந்து சேருங்கள். உங்களின் தினவெடுத்த தோள்களுக்கு உணவளிக்கக் காத்திருக்கிறது, கோயில் போர்க்களம் ஆம், போர்முனை உங்களை அழைக்கிறது. வாருங்கள்! படை திரண்டு வாருங்கள்! கடல் மடை திறந்துவிட்டாற் போல் வந்துசேருங்கள்! வாழ்க சிவகங்கை! வாழ்க மன்னவர்!

**கூட்டத்தினர் எல்லாரும்** : வாழ்க சிவகங்கை!
வாழ்க மன்னவர்!

- திரை -

## காட்சி - 8

**நிழற்காட்சி** : வெண்திரையில் நிழல் உருவங்கள்; திரையில் இரு பக்கத்து வீரர்களும் போரிடும் காட்சி; துப்பாக்கிகளும் வாள்களும் மோதுகின்றன,

பின்னணியில் ஆங்கிலேயர் படையின் பாண்டு வாத்தியமும், தமிழர் படையின் பம்பை ஒலியும் மாறி மாறித் துரித கதியில் ஒலிக்கின்றன. அத்துடன்,



**இடம்** :

**பாத்திரங்கள்** :

**சின்ன**

**வெள்ளை**

**சின்ன**

Scanned by CamScanner

‘மாரேர ! மாரோ !’ ‘விடாதே ! தாக்கு !’ ‘By St. Geroge! Charge!’

என்ற பல குரல்களும் மாறி மாறிக் குழம்பி ஒலிக்கின்றன. தாக்குண்டு விழுபவர்களின் அலறல், வெடிச் சப்தம்; வாள்களின் டங்காரம்.)

- திரை -

## காட்சி - 9

**இடம்** : (காளையர் கோயில்) கோயில் மதில்புறம்.

**பாத்திரங்கள்** : முத்து வடுகநாதர், வெள்ளை மருது, சின்ன மருது, வேலுநாச்சியார், ஸ்மித், உமார், சேவகர்கள், சிப்பாய்கள்.

(வெள்ளை மருதுவும் முத்து வடுகநாதரும் யுத்தக் கோலத்தில் நின்றுகொண்டிருக்கிறார்கள். சின்ன மருது படபடப்போடு ஓடி வருகிறான்).

**சின்ன** : (மூச்சு வாங்க) அண்ணா! அண்ணா!

**வெள்ளை** : (பதறிப்போய்) தம்பி! ஏன் இப்படி ஓடி வருகிறாய்? என்ன நடந்துவிட்டது?

**சின்ன** : காரியம் கெட்டுவிட்டதண்ணா கெட்டு விட்டது! எவனோ துரோகி நம்மை வஞ்சித்து விட்டான். காட்டைக் கடந்து கோட்டைக்கு வரும் பாதையைக் காட்டிக் கொடுத்துவிட்டான். பகைவர்கள் கோட்டை வாசலுக்கே வந்து விட்டார்கள்!

Scanned by CamScanner

'மாரேர! மாரோ!' 'விடாதே! தாக்கு!' 'By St. Geroge! Charge!'

என்ற பல குரல்களும் மாறி மாறிக் குழம்பி ஒலிக்கின்றன. தாக்குண்டு விழுபவர்களின் அலறல், வெடிச் சப்தம்; வாள்களின் டங்காரம்.)

- திரை -

## காட்சி - 9

**இடம்** : (காளையர் கோயில்) கோயில் மதில்புறம்.

**பாத்திரங்கள்** : முத்து வடுகநாதர், வெள்ளை மருது, சின்ன மருது, வேலுநாச்சியார், ஸ்மித், உமார், சேவகர்கள், சிப்பாய்கள்.

(வெள்ளை மருதுவும் முத்து வடுகநாதரும் யுத்தக் கோலத்தில் நின்றுகொண்டிருக்கிறார்கள். சின்ன மருது படபடப்போடு ஓடி வருகிறான்).

**சின்ன** : (மூச்சு வாங்க) அண்ணா! அண்ணா!


**வெள்ளை** : (பதறிப்போய்) தம்பி! ஏன் இப்படி ஓடி வருகிறாய்? என்ன நடந்துவிட்டது?

**சின்ன** : காரியம் கெட்டுவிட்டதண்ணா கெட்டு விட்டது! எவனோ துரோகி நம்மை வஞ்சித்து விட்டான். காட்டைக் கடந்து கோட்டைக்கு வரும் பாதையைக் காட்டிக் கொடுத்துவிட்டான். பகைவர்கள் கோட்டை வாசலுக்கே வந்து விட்டார்கள்!

Scanned by CamScanner

**முத்து** : இனி ஆகவேண்டியதைக் கவனியுங்கள் இப்போதே நீங்கள் இருவரும் ராணி வேலுநாச்சியாரை அழைத்துக்கொண்டு, கோட்டையைவிட்டு வெளியேறிவிடுங்கள். காளேஸ்வரனின் கர்ப்பக் கிருகத்திலுள்ள சுரங்கப் பாதை உங்களைக் காட்டுக்குள் அழைத்துச் சென்றுவிடும். நான் மட்டும் இங்கிருந்துகொண்டு எதிரிகளைத் தாக்கிக்கொள்கிறேன்.

**சின்ன** : என்ன வார்த்தை இது, மகாராஜா! உங்களை மரணப் பிடியில் விட்டுவிட்டு, நாங்கள் மட்டும் உயிர் பிழைத்து ஓடி ஒளிப்பதா? அத்தனைக்கு நாங்கள் கோழைகள் அல்ல!



**முத்து** : சின்ன மருது, உன் வீரத்தைப் பாராட்டுகிறேன். ஆனால், இப்போது நமக்கு உதவக்கூடியது வீரமல்ல; விவேகம்தான். எனவே நான் சொல்கிறபடியே செய்யுங்கள். இப்போதே நமது அரண்மனைச் சொத்துக்களையும் ஆயுதங் களையும் அந்த ரகசியப் பாதை வழியாக வெளியேற்றிவிடுங்கள். ராணி வேலுநாச்சி யாரையும் உங்களோடு அழைத்துச் சென்றுவிடுங்கள். இதுதான் உங்கள் மன்னனின் இறுதி உத்தரவு.

**வெள்ளை** : தாங்களும் வந்துவிடலாமே, மகாராஜா!

**முத்து** : (சிரித்து) நாட்டை ஆளும் மன்னன் கோட்டையை விட்டு ஓடுவது அழகல்ல, மரணத்தைவிட, எனக்கு மானம் பெரிது, மருதப்பரே! - மானம் பெரிது! நான் சொல்கிறபடியே செய்யும். அருகிலுள்ள பூச்சி நாயக்கன் பாளையத்து அதிபர்

நமக்கு மிகவும் வேண்டியவர். நமது சொத்துக்களையும், ஆயுதங்களையும் அங்குப் பத்திரப்படுத்துங்கள். ராணியையும் காப்பாற்றுங்கள்!

(இந்தச் சமயத்தில் இராணி வேலுநாச்சியார் அங்கு வருகிறாள்).

**வேலு** : (வந்தவாறே) என்ன, என்னைக் காப்பாற்றுவதா? என்ன நடந்துவிட்டது மகாராஜா?

**முத்து** : வேலுவா? வா. நல்ல சமயத்தில் வந்தாய். என்ன நடந்துவிட்டது என்றா கேட்கிறாய்? நடக்கக் கூடாதது நடந்துவிட்டது. எதிர்பாராதது நடந்துவிட்டது. ராணி; நீ உன் கணவனிடம் நிரந்தரமாக விடைபெற்றுக்கொள்ளும் காலம் வந்துவிட்டது, வேலு!

**வேலு** : என்ன வார்த்தை இது, மகாராஜா?

**முத்து** : ஆம், ராணி. நமது கோட்டை பிடிபடும் நிலையில் இருக்கிறது. இனியும் நீ இங்குத் தாமதிப்பதில் பயனில்லை. இப்போதே நீ நமது சேனைத் தலைவர்களோடு கோட்டையைவிட்டு வெளியேற வேண்டும்.

**வேலு** : தங்களை இங்கு விட்டுவிட்டா? தங்களை விட்டுப் பிரிந்தா? அதைவிட, நானும் தங்களுடனேயே இருந்து போரிட்டு மாண்டு மடிகிறேனே, மகாராஜா! (அழத் தொடங்குகிறாள்).

**முத்து** : வேலுநாச்சி! இது என்ன அழுகை? அழுவதற்கு இது நேரம் அல்ல; அழுவது நம் மரபும் அல்ல. மறக்குலத்துப் பெண்

மரணத்தைக் கண்டு கதி கலங்கக் கூடாது. உன் கணவன் வீரனாகத்தான் சாவான்; கோழையாக உயிர் பிழைத்து ஓடமாட்டான். ஆனால், நான் மாண்டாலும்; என்னை மடியச் செய்த அந்த அன்னியரை, அந்த வெள்ளைப் பரங்கியரை, நவாபின் நாசகாலர்களைப் பழிக்குப் பழிவாங்க, நம் சிவகங்கைச் சீமையின் அரசுரிமையை நிலைநாட்ட, நீயாவது உயிரோடு இருக்கத்தான் வேண்டும். இந்த விருப்பத்தை, வேண்டுகோளை நிறைவேற்றுவதே உனது கடமை.

**வேலு** : (அழுது) கணவனை விட்டுப் பிரிவதுதான் மனைவியின் கடமையா, அரசே?

**முத்து** : போர்க்களத்திலே புராணம் படிக்காதே. பிரியும் காலம் வந்தால் பிரியத்தானே வேண்டும்?... ஏன் அழுகிறாய்? அழாதே, உடனே புறப்படத் தயாராகு. ஏன் தயங்குகிறாய்? போ, போ. உடனே புறப்படு.

**வேலு** : மகாராஜா! என்னைப் போகவா -

**முத்து** : வழக்காடுவதற்கு நேரமில்லை, வேலு. போ. உடனே போ ம்!...

(வேலு அழுதுகொண்டே உள்ளே செல்கிறாள்.)

**வெள்ளை** : மகாராஜா! தங்கள் முடிவை மாற்றிக்கொள்ள வழியே இல்லையா?

**முத்து** : ஆம். மருதப்பரே! அன்னியரின் படையெடுப்புக்கு அரவான் பலியாக, களபலியாக நான் மாளவேண்டியதுதான். என்னுடைய உடம்பு சுடுசாம்பல்

Scanned by CamScanner

ஆனபோதும், நமது சிவகங்கைச் சீமை சுதந்திரமாய் இருந்தால் போதும். அந்த உறுதியை மட்டும் நீங்கள் எனக்களித்தால் அதுவே எனக்குத் திருப்தி; ஆத்ம சாந்தி.

**வெள்ளை** : மகாராஜா! இதோ உங்கள் ராஜ சன்னதியிலும், காளேஸ்வரனின் தேவ சன்னதியிலும் நான் ஆணையிட்டுச் சொல்கிறேன். சிவகங்கைச் சீமையை மீட்பதற்காக எனது உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணம் செய்கிறேன். தங்கள் உத்தரவுப்படியே இப்போதே வெளியேறுகிறேன். வெளியேறி, திண்டுக்கல் கோட்டையில் முகாம் இறங்கியிருக்கும் மைசூர் ஹைதரலியைச் சந்திக்கிறேன். அவரிடம் படைபல உதவிபெற்று, மீண்டும் இந்த அன்னியர்கள் மீது படையெடுத்து வருகிறேன். இது உறுதி, இது சத்தியம்.

**முத்து** : மருதப்பரே! ஹைதர் அலி வெள்ளையர்களுக்கு எதிரிதான். ஆனால் எதிரிக்கு எதிரி நமக்கு நண்பனாகிவிட மாட்டான். ஜாக்கிரதை!

**வெள்ளை** : மகாராஜா! எக்காரணம் கொண்டும் நான் ஹைதரிடம் ஏமாந்துவிடமாட்டேன். ஆனாலும் உங்களை விட்டுச்செல்வதை மட்டும் -

**முத்து** : என்னைப்பற்றி கவலைப்படாதீர். இனி யாரும் என்னைக் காப்பாற்ற முடியாது. ஆனால், நாட்டைக் காப்பது மட்டும் உமது பொறுப்பு.

**வெள்ளை** : அந்தப் பொறுப்பை நான் நிச்சயம் நிறைவேற்றி வைப்பேன், மகாராஜா!

Scanned by CamScanner

முத்து : இந்த வார்த்தையே போதும். இனி என் ஆத்மா சாந்தி அடைந்துவிடும். சரி, மருதப்பரே, இனியும் காலம் தாழ்த்த வேண்டாம். ஒவ்வொரு கணமும் நம்மைச் சாவு நெருங்கிக்கொண்டிருக்கிறது!

சேவ. 2 : (ஓடோடி வந்து) மகாராஜா! கீழவாசல் கோட்டைக் கதவை எதிரிகள் தகர்த்து விட்டார்கள். அவர்கள் படை உள்ளே நுழைந்துவிட்டது!

முத்து : மருதப்பரே, உடனே புறப்படுங்கள். ம்! சீக்கிரம்!

வெள்ளை : வருகிறோம், மகாராஜா. வாழ்க வடுகநாதர்!

சின்ன : வாழ்க சிவகங்கை!

(வெள்ளை மருது, சின்ன மருது இருவரும் அவசரமாக ஓடி மறைகிறார்கள். முத்துவடுகநாதர் உருவிய வாளோடு கை கூப்பி நின்று பிரார்த்திக்கிறார்).

முத்து : காளேஸ்வரா! என்னைப் பலி வாங்கிக்கொண்டு, இவர்களைக் காப்பாற்றிவிடு. இவர்களையும் சோதித்துவிடாதே!

(பின்னணியில் போர் ஆரவாரம். மேடைமீது அங்குமிங்கும் உருவிய வாளோடு சேவகர்கள் ஓடுகிறார்கள். நவாப் சிப்பாய்கள் மேடைக்கு வந்துவிடுகிறார்கள். சிப்பாய்களுக்கும் சேவகர்களுக்கும் போர் நடக்கிறது. முத்துவடுகநாதரும் போரிடுகிறார்).

முத்து : (போரிடும்போதே) வீரர்களே! எதிரிகளை முன்னேற விடாதீர்கள்! தடுத்து நிறுத்துங்கள்! குத்துங்கள்! கொல்லுங்கள்! வெட்டுங்கள்! வீழ்த்துங்கள்!

Scanned by CamScanner

(இவ்வாறு பேசும்போதே திடீரென்று பெரிய வெடிச் சப்தம் கேட்கிறது. மார்பில் தாக்குண்ட முத்து வடுகநாதர் மார்பிலிருந்து இரத்தம் கொட்ட, வேதனை தாங்கமாட்டாமல் அலறிக்கொண்டு கீழே விழுகிறார்).

(விழும்போது) ஹா! காளேஸ்வரா!... வாழ்க சிவகங்கை! வாழ்க தமிழ்க்குலம்!... வாழ்க...

(முத்து வடுகநாதர் மடிகிறார். உடனே கர்னல் ஸ்மித், உமார், நவாப் சிப்பாய்கள் ஓடி வருகிறார்கள்).

உமார் : சிப்பாய்களே! பிடியுங்கள் எதிரிகளை! சுற்றி வளையுங்கள்!

(சேவகர்கள் இருவரும் ஓடிவிடுகிறார்கள். உமார் கீழே கிடக்கும் மன்னரைப் பார்க்கிறான்).

ஸ்மித் சாஹெப்! இதோ சிவகங்கை மன்னன்; முத்து வடுகநாதன்!

(முத்து வடுகநாதரைப் புரட்டிப் பார்த்துவிட்டு)

ஆனால் இவன் மாண்டுவிட்டான் ஸ்மித்.

ஸ்மித் : அப்படியா? சனியன் ஒழிந்தது! நமக்கு ஒரு தோட்டா மிச்சம், உமார் (சிரிக்கிறான்)

உமார் : ஆனால் - அந்த மருது வீரர்கள்? எங்கே அவர்கள்? டேய், சிப்பாய்களா! எல்லா இடங்களிலும் புகுந்து தேடுங்களடா!

(சிப்பாய்கள் உள்ளே சென்று திரும்புகிறார்கள்).

சிப். 2 : ஹுஸூர்! யாரையுமே காணவில்லை!

உமார் : அப்படியா? பயல்கள் தப்பிவிட்டார்கள் போலிருக்கிறது, ஸ்மித்!

Scanned by CamScanner